# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# பொதுவழிகாட்டல்களும் பரிந்துரைகளும்

***பொலிஸ் பாதுகாப்பில் (custody) உள்ளவர்கள் மற்றும்,பொலிஸாருடனான மோதல்களின் போது ஏற்பட்ட மரணங்ளை தடுப்பது (Encounter Deaths) தொடர்பான இலங்கை பொலிஸாருக்கான 2025 ஆம் ஆண்டு முதலாம் இலக்க பொதுவழிகாட்டல்களும், பரிந்துரைகளும்.***

***மே 2025***

## அறிமுகம்

*இலங்கை அரசியலமைப்பின் 13(4) ஆம் உறுப்புரையில் உட்கிடையாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உயிர் வாழ்வதற்கான உரிமை இலங்கையிலுள்ள ஒவ்வொரு நபருக்கும் உரித்தான ஓர் உள்ளார்ந்த உரிமையாகும். இலங்கையின் நீதிச் செயன்முறைக்குள் உயர் நீதிமன்றத்தினால் விசாரணைக்குட்படுத்தபட்ட ஶ்ரீறியானி சில்வா எதிர் இத்தமல்கொட, நிலையப் பொறுப்பதிகாரி,பயாகலை(2003) 1 S.L.R 14 என்ற வழக்கில் போன்றே மிக அண்மையில் தீர்ப்பளிக்கப்பட்ட பாத்திமா ஷர்மிலா எதிர் நிலையப் பொறுப்பதிகாரி,கொம்பனித்தெரு பொலிஸ் நிலையம் மற்றும் ஏனையோர் என்ற 398/2008 ஆம் இலக்க உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பான வழக்குகளில் உட்கிடையான உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்ச்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*பாத்திமா ஷர்மிலா வழக்கில் உயர் நீதிமன்றம் பின்வரும் விடயத்தை அவதானித்தது. "நீதி முறைக்குப் புறம்பான கொலைகள் அல்லது தடுப்புக் காவலில் உள்ளவர்களின் மரணங்களைத் தடுத்தல் மீறப்படமுடியாத வாழ்க்கை நிலைநிறுத்தல்களிலும் சர்வதேச கடப்பாடுகளை நிலைநாட்டுவதற்கு உள்ளூர் தராதரங்களை உருவாக்க உதவுவதோடு, உள்நாட்டு சட்டத்தின் அடிப்படை மனித உரிமைகளின் பாதுகாப்புக்கான மேன்மிகை ஒன்றாகவும் விளங்குகிறது. அரசியலமைப்பின் 13(4) ஆம் உறுப்புரை விரிவான முறையிலும்,முக்கியமாக அரசியலமைப்பின் 4(ஈ) என்ற உறுப்புரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுவதற்கான அரசின் பொறுப்பு என்ற வகையில் பொருள் கோடல் செய்யப்படல் வேண்டும். இவ்வுறுப்புரை பொலீஸ் உள்ளிட்ட அரசாங்கத்தின் அனைத்து அங்கங்களாலும் அடிப்படை உரிமைகள் "மதிப்பளிக்கப்படவும்,பேணப்படவும்,மேம்படுத்தப்படவும்" வேண்டுமெனப் பிரகடனப்படுத்துவது அரசியலமைப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அத்தகைய உரிமைகளை "சுருக்கவோ மட்டுப்படுத்வோ மறுக்கவோ" கூடாது என்றும் கூறுகிறது.*

*குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் 6 ஆம் உறுப்புரையானது "ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமை காணப்படுகிறது. இவ்வுரிமை சட்டத்தால் பாதுகாக்கப்படல் வேண்டும். எவருக்கும் இவ்வுரிமையை மனித வாழ்விலிருந்து எதேச்சாதிகாரமாகப் பறிக்க முடியாது." என குறிப்பிடுகின்றது.*

*இதற்கமைய, இலங்கை பொலிஸாரினால் கைது செய்யப்படுகின்ற அல்லது தடுத்து வைக்கப்படுகின்ற எல்லா நபர்களும் அவர்களது உயிர் வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமைக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கும் கண்ணியப்படுத்தப்படுவதற்கும் உரித்துடையவர்களாவர்.*

*'பொலிஸ் பாதுகாப்பில் இருத்தல்' (Custody) என்பதனூடாகக் கருத்தில் கொள்ளப்படுவது,பொதுவாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்படுகின்ற நிலையாகும். சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள செயன்முறைக்கமைய பொலிஸாரினால் நபரொருவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பம் முதல் அவர் பொலிஸ் பாதுகாப்பில் இருந்து சட்ட ரீதியாக விடுவிக்கப்படும் வரை அவர் பொலிஸ் தடுப்புக் காவலில் இருக்கின்றாரென கருத்தில் கொள்ளப்படும்.*

*'பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் போது மரணம் சம்பவித்தல்' (Custodial Deaths) என்பதன் மூலம் கருதப்படுவது, ஒரு பொலிஸ் அலுவலரின் / அலுவலர்களின் நேரடியான அல்லது மறைமுகமான செயலொன்றினூடாக அல்லது செயலாற்றாமை ஒன்றினூடாக தடுப்புக்காவலில் உள்ள நபரொருவர் மரணமடைவதாகும். அத்தகைய மரணமொன்று நிகழ முடிவது :*

I. கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து பொலிஸ் தடுப்புக் காவல் நிலையமொன்றிற்கோ அல்லது பொலிஸ் நிலையத்துக்கோ அழைத்துச் செல்லப்படும் போது,

II. பொலிஸ் நிலையமொன்றிலோ அல்லது பொலிஸ் தடுப்புக் காவல் நிலையமொன்றிலோ தடுத்து வைத்திருக்கின்றபோது, அல்லது

III. தடுப்புக் காவல் நிலையமொன்றிலிருந்து (Detention) அல்லது பொலிஸ் நிலையம் ஒன்றிலிருந்து வேறு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட இடமொன்றிற்கு (உதாரணமாக வைத்தியசாலை) அழைத்துச் செல்கின்ற போது அல்லது பரிசோதனை நடவடிக்கையொன்றின் போது ஆகும்.

'காவல்துறையினருடனான மோதல்களின் போது ஏற்படும் மரணம்' (Encounter death) என்பதனூடாக கருதப்படுவது,பொலிஸ் அலுவலர் ஒருவரினால் /பொலீஸ் அலுவலர்களினால் நீதி முறைக்குப் புறம்பாக, சட்ட வரையறைக்கு முரணாக வேண்டுமென்றே ஆளொருவர் கொலை செய்யப்படுவதாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள், அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் என்பவற்றின் அடிப்படையில், 2020 ஜனவரி மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கை பொலிஸாருடனான தொடர்புடைய தடுப்புக் காவலின் போதான மரணங்களும்,பொலீஸாருக்கு மோதல்களின் போது நிகழ்கின்ற மரணங்களும் (சுட்டுக்கொல்லப்படுதல் / Custodial Deaths) 49 மரணங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இக்காலப் பகுதிக்குள் அறிக்கையிடப்பட்டுள்ள தடுப்புக் காவலின் போது சம்பவித்த மரண நிகழ்வுகள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய பிரதான மூன்று பிரதான மாவட்டங்களுக்குள் அமையப் பெற்றுள்ள பொலிஸ் நிலையங்களுடனும் பிரிவுகளுடனும் தொடர்புடையனவாகவே உள்ளன. இலங்கை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குக் குறைவான காலப்பகுதிக்குள் பெரும்பாலானோர் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாகவே மரணித்துள்ளனர். அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்து மரணங்களும் ஆயுதங்கள் அல்லது போதைப் பொருட்கள் உள்ள இடங்களைக் காட்டுவதற்காக செல்கின்ற செயன்முறையின் போது மிகக் கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவான காரணங்களாலோ அல்லது கடமையில் ஈடுபட்டிருந்த அலுவலர்களின் கவனயீனம் அல்லது தவறு காரணமாகவோ நிகழ்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்பட்டுள்ள பொலிஸாருடனான மோதலின் போது நிகழ்ந்த மரணங்களில் பெரும்பாலானவை கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களின் பொலிஸ் நிலையங்கள் அல்லது பிரிவுகளுடன் தொடர்புடையனவாகும்.கொழும்பில் நடைபெற்ற மூன்று சம்பவங்கள் விசேட அதிரடிப்படையுடன் (STF) தொடர்புபட்டவையாகும். அறிக்கையிடப்பட்டுள்ள பொலிஸாருடனான மோதலின் பொழுது அல்லது பொலிஸாரினால் தெரிவிக்கப்படுகின்றவாறு வன்முறையாக நடந்து கொள்கின்ற நபர்களுடனான பரஸ்பர மோதலின் போது பொலிஸாரின் உயிர்ப் பாதுகாப்புக்காகவுள்ள தற்காப்புரிமை செயற்படுத்தப்பட்ட போதே நிகழ்ந்துள்ளன.

இத்தகைய சந்தர்ப்பமொன்றில் தடுப்புக் காவலில் உள்ள போதும் பொலிஸாருடனான மோதல்களின் போதும் (சுட்டுக்கொல்லப்படுதல்) நிகழ்கின்ற மரணங்களை தவிர்ப்பதற்கும், அனைத்து நபர்களுக்குமுள்ள உயிர் வாழ்வதற்கும், சுதந்திரமாக இயங்குவதற்குமான உட்கிடையான உரிமையை

*பாதுகாப்பதற்குமாக இலங்கை பொலிஸாருக்கு பொது வழிகாட்டல்ளையும், பரிந்துரைகளையும் வெளியிட வேண்டுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தேசிக்கின்றது.*

***01.* கைது செய்யப்பட முன்னரும், கைது செய்யப்படுகின்ற போதும், கைது செய்யப்பட்ட பின்னருமான பாதுகாப்பு**

***சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்வதற்குத் தயாராகுதல்***

*1.1* இலங்கை அரசியலமைப்பின் *13(1)* ஆம் உறுப்புரைக்கமைய எதேச்சாதிகார முறையில் கைது செய்யப்படுவதிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கு ஒவ்வொரு நபருக்குமுள்ள உரிமைக்கு பொலிஸ் அலுவலர்கள் கௌரவமளித்தல் வேண்டும்.

*1.2* கைது செய்யப்படல் எதேச்சாதிகாரமாக மேற்கொள்ளப்படலாகாது. எவரேனும் ஒரு நபரை கைது செய்கின்ற ஒவ்வொரு பொலிஸ் அலுவலருக்கும் அந்நபர் குற்றமொன்றை இழைத்துள்ளாரெனவுள்ள சாதாரண ஐயத்தின் அடிப்படையில் அவ்வாறு கைது செய்யப்படுவதற்கான தேவைப்பாட்டை ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளைத் தொடர்ந்து நியாயப்படுத்த முடியுமாதிருத்தல் வேண்டும்.

*1.3* கைது செய்யப்படுவதற்கு முன்னர் ஆரம்பகட்ட விசாரணைகள் நடாத்தப்படல் வேண்டும். இது எவரேனுமொரு நபர் குற்றமொன்றை இழைத்துக் கொண்டிருப்பதாக அவதானிக்கப்படுகின்ற இடமொன்றில் அல்லது குற்றத்தை இழைக்க முயலுகின்ற இடமொன்றில் குற்றமொன்றை இழைத்தல் அல்லது குற்றமொன்றை இழைக்க முயலுதல் தொடர்பாக ஏதேனுமொரு தகவல் அல்லது புலனாய்வுத் தகவல் கிடைக்கப் பெற்ற பொலிஸ் நிலையத்தில் வைத்து நிகழ முடியும்.

*1.4* அரசியலமைப்பின் *13(5)* ஆம் உறுப்புரையில் உத்தரவாதப்படுத்துள்ளவாறு குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை ஒவ்வொரு நபரும் சுற்றவாளியென ஊகிக்கப்படல் வேண்டுமென்ற ஒவ்வொருவருக்குமுள்ள உரிமைக்கு பொலிஸ் அலுவலர்கள் மதிப்பளித்தல் வேண்டும். ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது அனைத்து சந்தேக நபர்களுக்குமுள்ள சுய குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு உட்படாமைக்கான உரிமை வழங்கப்படல் வேண்டும். எந்தவொரு சந்தேக நபருக்கும் மௌனம் காப்பதற்கும் எந்நிலைமையின் கீழும் தாமாக குற்றவியல் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்காக வலுக்கட்டாயத்திற்கு உட்படுத்தப்படாமல் இருப்பதற்கும் அவருக்கெனவுள்ள உரிமைக்கு பொலிஸ் அலுவலர்கள் மதிப்பளித்தல்வேண்டும்.

*1.5* *1979* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் *109* ஆம் பிரிவுக்கு அமைய, ஆரம்பிக்கப்பட்ட விசாரணையின் போது பொலிஸாருக்கு வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக அழைக்கப்பட்டதன் பின்னர் எவரேனுமொரு நபருக்கு தான் சுயமாகவே குற்றவியல் குற்றம் இழைத்ததாக ஒப்புதல் வாக்குமூலமொன்றை வழங்குமாறு வலுக்கட்டாயப்படுத்துகின்ற சந்தர்ப்பமொன்றில் கைது செய்யப்படலாகாது. வாக்கு மூலமொன்றை வழங்குவதற்காக நபர் ஒருவரை அழைக்கின்ற போது குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் *110(2)* ஆம் உட்பிரிவில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள கீழே

குறிப்பிடப்பட்டுள்ள அந்நபருக்கான உரிமைகளுக்கு பொலிஸார் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மதிப்பளித்தல் வேண்டும். 'தான் சுயமாக குற்றவியல் குற்றச்சாட்டை வெளிப்படுத்துவதற்கோ அல்லது தண்டனையொன்றிற்கோ உள்ளாக்கப்படக்கூடிய நோக்குடன் கூடிய வினாக்களைத் தவிர, அவ் விடயத்தோடு தொடர்புடைய அலுவலர் அல்லது விசாரணை செய்பவரினால் தம்மிடம் கேட்கப்படுகின்ற அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை அளிக்கக் கடப்பாடு உடையவராதல் வேண்டும்'.*(வலியுறுத்தப்பட்டுள்ளது).*

*1.6* குற்றவியல் செயற்பாடுகள் அல்லது பாரதூரமான குற்றவியல் குற்றமொன்றை இழைப்பதற்கு முயற்சித்தல் தொடர்பான தகவல்கள் அல்லது புலனாய்வுத் தகவல்களை பொலிஸாருக்கு கிடைக்கப் பெறின், அத்தகைய தகவல்களை அல்லது புலனாய்வுத் தகவல்களை சிறு குறிப்புப் புத்தகத்தில் *(PNB)* எழுத்து மூலம் குறித்துக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய தகவல்களை அல்லது புலனாய்வுத் தகவல்களை வழங்கியவர் உயர் அதிகார பீடமொன்றின் ஒருவராயின், அந்நபரின் விபரங்களும் பதியப்படல் வேண்டும். அத்தகைய அறிக்கையொன்று தொடர்ந்து வரும் கைதுகளுக்கான அடிப்படையைத் தாபிப்பதற்கான பணிக்கு மிக முக்கியமான ஓர் ஆவணமாகும்.

*1.7* சந்தேக நபர் ஒருவரை கைது செய்வதற்காக பொலிஸ் அலுவலர்களை ஈடுபடுத்துவதற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் சந்தேக நபரை கைது செய்கின்ற போது பொலிஸாரினால் நிகழக்கூடிய அபாயங்கள் மற்றும் சவால்கள் தொடர்பாக மதிப்பீடு செய்ய வேண்டும். ஆபத்து மட்டத்தைத் தீர்மானிப்பதற்காக ஒரு வழிகாட்டு நெறியாக 'அபாய மதிப்பாய்வினை (முதலாம் பின்னிணைப்பைப் பார்க்கவும்) பயன்படுத்த முடியும்.

*1.8* அபாய மட்ட மதிப்பாய்வினை அடிப்படையாக கொண்டு சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் கீழ் குறித்தவாறான தீர்மானங்ளை மேற்கொள்ள முடியும்.

*i.* கைது செய்யும் செயற்பாட்டின் போது ஈடுபடுத்தப்பட வேண்டிய பொலிஸ் அலுவலர்களின் உள்ளடக்கமும் எண்ணிக்கையும் ;

*ii.* செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டிய வாகனங்களின் வகையும் எண்ணிக்கையும்;

*iii.* கைது செய்யும் செயற்பாட்டின் போது பொலிஸ் அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரமளிக்கப்பட்ட ஆயுதங்களும் கட்டுப்பாட்டு முறைமைகளும்;

*iv.* செயற்பாட்டிற்கிடையில் குறித்த அணியினர் பின்பற்றவேண்டிய கட்டளை முறைமை மற்றும்

*v.* செயற்பாடு மேற்கொள்ளப்படும் நேரம், திகதி மற்றும் இடம்

*1.9* *சந்தேக நபரான பெண் ஒருவரை திட்டமிட்டுக் கைது செய்கின்ற போது, கைது செய்யும் நடவடிக்கையோடு தொடர்புடைய பொலிஸ் அலுவலர்களின் அணியில் ஆகக் குறைந்தது ஒருபெண் உத்தியோகத்தரேனும் உள்ளடக்கப்படல் வேண்டும்.*

*1.10* *கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுகின்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களும் செயற்பாட்டினுடைய விடயப் பரப்பு, குறிக்கோள்கள், அவர்களின் குறிப்பான வகிபாகங்கள் மற்றும் செயற்பாட்டுடன் தொடர்புடைய அபாயங்கள், சவால்கள் தொடர்பாக முழுமையாக அறிவூட்டப்பட்டிருத்தல் வேண்டும்.*

*1.11* *கைது செய்யும் நடவடிக்கை தொடர்பாக அறிந்திருக்கும் அனைத்து பொலிஸ் அலுவலர்களும் குறித்த செயற்பாடு தொடர்பாக, சந்தேக நபரின் விபரங்கள் மற்றும் இடங்கள் தொடர்பாகவும்,பொலிஸாருக்கு கிடைக்கப் பெறுகின்ற ஏனைய தகவல்கள் அல்லது புலனாய்வுத் தகவல்கள் தொடர்பாகவும் அதிகூடிய இரகசிய தன்மையை பேணுவது தொடர்பில் உத்தரவாதமளித்தல் வேண்டும்.*

*சந்தேக நபர் ஒருவரை கைது செய்தல்*

*1.12* *கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுகின்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களும் தமது ஆளடையாளத்தை எப்பொழுதும் சரியாகவும், தெளிவாகவும், பார்க்கக்கூடிய வகையிலும் அவர்களது சீருடையில் அணிந்திருத்தல் வேண்டும்.*

*1.13* *விசேட கைது செய்யும் செயற்பாடொன்றில் ஈடுபடுகின்ற அலுவலர்கள் சிவில் உடையில் இருக்க வேண்டிய தேவையிருப்பின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது அலுவலக ரீதியான ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக அவ்வலுவலர்கள் தம்வசம் தமது உத்தியோகபூர்வ ஆளடையாள அட்டைகளை வைத்திருத்தல் வேண்டும். கைது செய்யும் நடவடிக்கையின் போது சிவில் உடை தரித்திருக்கின்ற அலுவலர்கள் தமது உத்தியோகபூர்வ ஆளடையாள அட்டையைக் காட்சிப்படுத்தல் வேண்டுமென்பதோடு, கைது செய்யப்படுகின்ற நபருக்கு தமது உத்தியோகபூர்வ ஆளடையாளம் தொடர்பாக அறிவித்தலும் வேண்டும்.*

*1.14* *பொதுவாக கைது செய்கின்ற போது பலப்பிரயோகத்தை மேற்கொள்ள கூடாது. கைது செய்யப்படுகின்ற ஒருவர் எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்ற சந்தர்ப்பமொன்றில், கைது செய்வதற்குத் தேவையான பலப்பிரயோகமானது அவசியமான மற்றும் போதியளவிலான விதத்திலும், உரியவருக்கு மிகக் குறைந்த ஊறினை விளைவிக்கத் தக்க விதத்திலும் மாத்திரமே அமைய வேண்டும்.*

*1.15* *ஒருவர் கைது செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அத்தகைய நபர் கைது செய்யப்படுவதோடு தொடர்புடைய குற்றம் தொடர்பாக அவரை கைது செய்கின்ற அலுவலர்கள் அவருக்குத் தெளிவாக அறிவித்தல் வேண்டும்.அத்தகைய தொடர்பாடல் கைது செய்யப்படுகின்றவர் கிரகிக்கத்தக்க மொழிப்பியோகத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*1.16* *பிணை வழங்கக்கூடிய குற்றமொன்றிற்காக எவரேனும் ஒருவர் கைது செய்யப்படுவாராயின் 1997 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பிணை சட்டத்தின் கீழ் பிணை மீது*

*விடுதலைசெய்யப்படுவதற்கு குறிப்பிட்ட நபருக்கு உரிமை உண்டு என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.*

*1.17* *கைதொன்றினை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர்கள் கைதுடன் தொடர்புடைய செயற்பாடு பூராகவும் கைது செய்யப்படுகின்ற நபரின் மதிப்புக்கு கண்ணியம் அளித்தல் வேண்டும்.கைது செய்யப்படுகின்ற நபரை பகிரங்கமாக காட்சிப்படுத்துவதோ, ஊர்வலமாக அழைத்துச் செல்வதோ,கைது செய்யப்பட்ட நபருக்கு எந்தவொரு நிலையிலும் அவமானம் ஏற்படக் கூடிய விதத்திலோ நடந்து கொள்வதை பொலிஸ் அலுவலர்கள் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.*

*1.18* *எந்தவொரு பொலிஸ் பிரிவினாலும் உரிய கடமைப் பிரதேசம் தவிர்ந்த வேறு பொலிஸ் அதிகார பிரதேசமொன்றில் கைதொன்றினை மேற்கொள்வதாயின், அத்தகைய கைது நடவடிக்கையில் ஈடுபடுகின்ற பொலிஸ் அலுவலர்கள் உடனடியாக கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் பிரதேசத்துக்காகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அத்தகைய கைது தொடர்பாக அறிவித்தல் வேண்டும். இக் கைது தொடர்பாக உரிய பொலிஸ் நிலையத்திற்கு அறிவுறுத்தியதன் பின்னர், கைதினை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர்கள் கைது தொடர்பான தகவல்கள் உரிய பொலிஸ் நிலையத்தில் எழுத்து மூலம் பதிவுசெய்யப்பட்டுள்மை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை தடுப்புக் காவலில் வைத்திருத்தல்*

*1.19* *கைது செய்யப்பட்டவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொலிஸ் வாகனமொன்றில் பாதுகாப்பாக உரிய பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது வர்த்தமானி அறிவித்தலூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள வேறொரு இடத்திற்கோ இடம் மாற்றுதல் வேண்டும்.*

*1.20* *கைது செய்யப்பட்ட ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க முன்னர், குறிப்பிட்ட கைது தொடர்பான விபரங்களை முறையாகப் பதிய வேண்டுமென்பதோடு,கைது செய்யப்படுவதற்கான குற்றச்சாட்டுகள் மற்றும் அக்காலப் பகுதிக்குள் சந்தேக நபரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்கு மூலங்கள் அனைத்தும் கைது செய்யப்பட்ட நபருக்கு புரியதக்க ஒரு மொழியில் வாசித்துக் காட்டி அறிவூட்டுதல் வேண்டும்.*

*1.21* *கைது செய்யபட்ட ஒருவரைச் சோதனைசெய்கின்ற பொலிஸ் அலுவலர்கள் அந்நபரின் சுய கன்னியத்திற்கும் பிரத்தயேக தன்மைக்கும் (Privacy) மதிப்பளிக்கும் விதத்தில் அச்சோதனைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். கைதுசெய்யப்படுகின்றவர் பெண்ணொருவராயின் அவரதுசோதனை நடவடிக்கையை பெண் பொலிஸ் அலுவலர் மேற்கொள்ளவேண்டும் என்பதோடு கைதுசெய்யப்பட்ட பெண்ணின் சுய கண்ணியத்தையும், பிரத்தியேக தன்மையையும் (Privacy) மதிக்கும் விதத்தில் அமைதல் வேண்டும்.*

*குடும்பத்தினருடனான, மூன்றாம் நபர்களுடனான தொடர்பாடல்களை மேற்கொள்ளல்*

*1.22* *கைது செய்யப்பட்ட ஒருவருக்கு கைது செய்யப்பட்டமை தொடர்பாக தான் விரும்பிய தனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரோடு அல்லது நண்பர் ஒருவரோடு தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு உடனடியாக வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். 2018ஆம் ஆண்டின் 5 ஆம்*

*இலக்க வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தின் 15(2)ஆம் பிரிவினால் இவ்வுரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு கைது செய்யப்பட்டமைக்கான காரணம்,கைது செய்யப்பட்ட இடம் கைது செய்த பொலிஸ் நிலையம், தடுத்து வைக்கப்படுகின்ற இடம் தொடர்பாக தொடர்பாடல் செய்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படல் வேண்டும்.*

*1.23* *கைது செய்யப்பட்டவர் முதலாவது தடுப்பு நிலையத்திலிருந்து வேறொரு நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்படுவாராயின் நிலையம் மாற்றி அமைக்கப்பட்டமைக்கான காரணம் உள்ளிட்ட தடுப்புக் நிலையம் மாற்றி அமைக்கப்பட்டமை தொடர்பாக உரிய குடும்ப அங்கத்தினர் அல்லது நண்பருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறு மாற்றியமைக்கப்படுகின்ற நிலையம் என்ற வகையில் வேறொரு பொலிஸ் நிலையமாவோ, வைத்தியசாலையாவோ விசாரணை நிலைமொன்றாவோ இருக்கலாம். எவ்வாறாயினும், அது சட்ட ரீதியானதும் முறையான அதிகாரமளிக்கப்பட்டதுமான தடுப்பு நிலையமொன்றாகவிருத்தல் வேண்டும்.*

*1.24* *கைது செய்யப்பட்ட ஒருவரின் தடுப்புக் காவலுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற பொலிஸ் அலுவலர்களினால் கைது செய்யப்பட்டவர் தொடர்பான முழுமையான மற்றும் சரியான தகவல்கள் அந்நபரின் உரிய குடும்ப அங்கத்தினர் ஒருவருக்கு அல்லது நண்பர் ஒருவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். அத்தகைய தகவல்கள் மிக விரைவாகவும் மரியாதையுடனும் தேவையற்ற கால தாமதங்களின்றியும் வழங்கப்படல் வேண்டும். அத்தகைய அலுவலர்கள் தகவல்களை வழங்கிய நேரம், அத்தகவல்களைப் பெற்றுக் கொண்டவரின் பெயர், அத்தகைய ஒருவருக்கு வழங்கப்பட்ட தகவல்களின் இயல்பு, வகை போன்றவற்றை தகவல் வழங்கல் தொடர்பான எழுத்து மூல அறிக்கையொன்றினைபேணி வரல் வேண்டும்.*

*சட்டப் பிரதிநிதித்துவத்துக்கான அணுகல்*

*1.25* *கைதொன்றை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர் கைது செய்யப்பட்டவருக்கு காணப்படும் சட்ட ரீதியான பிரதிநிதியொருவரை அணுகுவதற்கான உரிமை தொடர்பாக அறிவூட்டுதல் வேண்டும்.*

*1.26* *கைது செய்யப்பட்டவருக்கு எவ்வித தாமதமும் அல்லது தடங்கல்களுமின்றி தான் விரும்புகின்ற சட்டத்தரணியோடு தொடர்பாடல் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல் வேண்டும். வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைத்து ஆட்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தின் 15(2) ஆம் பிரிவில் இவ்வுரிமை உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.*

*1.27* *கைது செய்யப்பட்ட ஒருவர் சார்பாக ஆஜராகின்ற சட்டத்தரணிக்கு காலதாமதமாகவோ தடங்கலோ இன்றி தடுப்புக்காவல் நிலையத்திற்கு உட்பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும். அத்தகைய சட்டத்தரணி ஒருவருக்கு தமது தரப்பினருடன் தொடர்பாடல் செய்வதற்கு போதிய கால அவகாசமும் தனிமையும் வழங்கப்படல் வேண்டும்.*

அத்தகைய மதியுரைகளை கைது செய்யப்பட்டவருக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அருகிலிருத்தலாகாது.

## 02. தடுப்புக் காவலிலிருக்கும் காலப்பகுதியிடையேயான பாதுகாப்பு

### போதிய வைத்திய சிகிச்சைகளை வழங்குதல்

2.1 தடுப்புக் காவலிலுள்ள ஒருவருக்கு பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர் கைதி தடுப்புக் காவலிலுள்ள சந்தர்ப்பங்களில் அவருக்கான வைத்திய சிகிச்சை அல்லது குறிப்பிட்ட மருந்து வகைகள் தேவைப்படுகின்றனவாவென மிகுந்த அக்கறையோடு ஆராய்ந்தறிதல் வேண்டும். அத்தகைய வைத்திய சிகிச்சை அல்லது குறிப்பான மருந்து உடலியல் அல்லது உளவியல் நோயொன்றுக்கு அல்லது நிலைமையொன்றுக்கானதாக இருக்கக்கூடும்.

2.2 தடுப்புக்காவலில் உள்ள ஒருவருக்கு வைத்திய சிகிச்சை அல்லது விசேட மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு தொடர்பாக பொலிஸ் அலுவலருக்கு அறியத்தரப்படின், பூரண வைத்திய பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்காக வைத்திய அலுவலரொருவரிடம் அக்கைதியை பொலிஸ் அலுவலர் ஆற்றுப்படுத்துதல் வேண்டும். அத்தகைய வைத்திய பரிசோதனையின் குறிக்கோள் யாதெனில்,தேவையான வைத்திய உதவிகளை வழங்குவதும் தடுப்புக் காவலிலுள்ள நபர் ஏதேனும் கொடுமைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளாரோ என்பதைக் கண்டறிவதுமாகும்.

2.3 வைத்திய அலுவலர் கைதியைப் பரிசோதிக்கின்ற போது, ஏதேனுமொரு காயம், உடல்நலமின்மை அல்லது வேறேதேனும் ஒரு நோய் அறிகுறி அவதானிக்கப்படுமிடத்து, சந்தேக நபரை உடனடியாக சட்ட வைத்திய அலுவலர் (JMO) ஒருவரிடம் ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

2.4 தற்கொலை முயற்சிக்கான சாத்தியம் அவதானிக்கப்படுமிடத்து,கைதிக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர் கைதியின் குடும்ப அங்கத்தவரை மற்றும் பொருத்தமான வைத்திய நிபுணர் ஒருவரைத் தொடர்பு கொள்ளல் வேண்டும்.கைதியை மிக நெருக்கமாகவிருந்து கண்காணிப்பதற்கும், தேவையான உளவியல் ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குமான வசதிகளை செய்து கொடுக்கும் பொருட்டு, தற்கொலை செய்து கொள்வதற்கான மிக உயர்ந்த சாத்தியப்பாடு காணப்படுகின்ற கைதிகளைத் தடுத்து வைத்துக் கொள்ளும் நிலைமைகளை முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் மாற்றியமைத்துக் கொள்ளல் வேண்டும்.

2.5 தடுத்து வைத்திருக்கின்ற காலப்பகுதிக்குள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தடுப்புக் கைதி கோரிக்கை விடுக்குமிடத்து,வைத்திய சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை கைதிக்கு வழங்குதல் வேண்டும்.கைதிக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்கள் கைதியின் தேவைகளை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் கைதியின் அத்தகைய கோரிக்கைகளை நிராகரிக்கக் கூடாது.

2.6 முதலுதவி சிகிச்சை தொடர்பான அடிப்படை அறிவும் கைதிகளின் வைத்திய தேவைப்பாடுகளைத் துரிதமாக நிறைவேற்றிக் கொடுக்கும் ஆற்றலும் கொண்ட போதிய பயிற்சியுடன் கூடிய ஆகக் குறைந்தது ஒரு பொலிஸ் அலுவலர் ஒருரேனும் பொலிஸ் நிலையத்தில் எப்பொழுதும் இருத்தல் வேண்டும்.

2.7 கைதிகளுக்குரிய வைத்திய தேவைப்பாடுகள், பராமரிப்பை வழங்குதோடு அல்லது விஷேட தேவைகளுடன் கூடிய கைதிகளுக்கு விஷேட வைத்திய சிகிச்சை மற்றும் வைத்திய பராமரிப்பினை

வழங்குதல் வேண்டும். இதில் அங்கவீனர்களான நபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டுகின்ற தாய்மார்கள் மற்றும் உடல் ரீதியான அல்லது உள ரீதியான நோய் நிலைமைகளுக்கு இலக்கானவர்கள் உள்ளடங்குவர்.

2.8 குறிப்பிட்ட கைதி ஒருவருக்காக தடுப்புக் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மருந்தை கைதியின் பெயர் , உட்கொள்ளப்படும் உரிய மாத்திரையின் அளவு,பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கைகள் என்பவற்றுடன் தெளிவாக குறித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

2.9 கைதிகளுக்கு எளிதில் பெற்றுக் கொள்ள முடியாதவாறு முதலுதவிப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து மருந்து வகைகளும் பூட்டிடப்பட்டு, தனித்தனியாக களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும் என்பதோடு, கைதி ஒருவருக்கான மருந்தினை வழங்க வேண்டியது, அதிகாரமளிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் மாத்திரமே அமைய வேண்டும்.

அடிப்படை தேவைப்பாடுகளை வழங்குதல்

2.10 கைதிகளுக்கு தேவைப்படுமிடத்தும் தேவைப்படும் விதத்திலும் தூய குடிநீர் வழங்கப்படுதல் வேண்டும்.கைதிகள் தடுத்து வைக்கப்படுகின்ற காலப் பகுதிக்கேற்ப தேவைப்படும் விதத்தில் போதியளவு உணவு வழங்கப்படல் வேண்டும்.

2.11 கைதிகளுக்கு சுகாதார (கழிப்பறை) வசதிகளுக்கான அணுகல் வழங்கப்பட வேண்டுமென்பதோடு,பொலிஸ் அலுவலர் ஒருவரினால் அவர்கள் அழைத்துச் செல்லப்படலும் வேண்டும்.பெண் கைதிகளை அழைத்துச் செல்ல வேண்டியவர் ஒரு பெண் பொலிஸ் அலுவலரே ஆவார். அனைத்து வசதிகளும் சுத்தமாகவும் சுகநலப் பாதுகாப்புடன் கூடியதாகவும், பயன்பாட்டுக்குப் பொருத்தமானதாகவும்,மேலும்பெண் கைதிகளுக்கான குறித்த சுகாதார தேவைகள் வழங்கப்படுதோடு, சுகாதார வசதிகள் ஆண்,பெண் சமூக நிலைமைகளுக்கு பொருந்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

2.12 கைதி தடுப்புக்காவல் வசதிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர்,கைதியினால் தனக்கு ஏதேனும் ஊறினை விளைவித்துக் கொள்ளத்தக்க எவையேனும் பொருட்கள்,உபகரணங்கள் அல்லது கருவிகள் அவ்வசதிக் கூடத்திற்குள் காணப்படுவதில்லையென்பதை கைதியோடு செல்கின்ற பொலிஸ் அலுவலர் உறுதிபடுத்திக் கொள்ளல் வேண்டும்

மேற்பார்வையும் தொடர்பாடலும்

2.13 கடமையில் ஈடுபட்டுள்ளவர்களும் கைதியின் கட்டுக்காவலுக்குப் பொறுப்பாக உள்ளவர்களுமான பொலிஸ் அலுவலர்கள் ஒவ்வொரு கைதியினதும் நடத்தைகள், பழக்க வழக்கங்களை தொடர்ச்சியாக அவதானித்தல் வேண்டும். அத்தகைய அலுவலர்கள் கைதிகளிடையே வன்முறைகள் நிகழக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்குமிடத்து, அதனை இனம் கண்டு தடுத்து வைக்கப்படுகின்ற காலப்பகுதிக்குள் நிகழக்கூடிய வன்முறைகள் நிகழ்வுகள் அல்லது வன்முறை நிகழ்வுகளுக்கான ஊக்கப்படுத்தலைத் தவிர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.14 கைதிகளிடையே வன்முறை நிகழ்வுகள் நிகழ்கின்ற சந்தர்ப்பங்களில்,உரிய பொலிஸ் அலுவலர்கள் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு, தேவைப்படுமிடத்து, வன்முறை நிகழ்வுகளோடு தொடர்புடைய

ஒவ்வொரு கைதிக்கும் வெவ்வேறான சிறைக்கூடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

*03.* விசாரணைக்குட்படுத்தலின் போதான பாதுகாப்பு

ஆரம்பகட்ட விசாரணைகளை நடாத்துதல்

*3.1* அரசியலமைப்பின் *11*ஆம் உறுப்புரையின் ஊடாக உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளவாறு விசாரணைக்கு உட்படுத்தல் செயன்முறைகளின் போது எவ்வித சித்திரவதைகளுக்கோ கொடூரமானதும், மனிதபிமானமற்றதும், இழிவானதுமெனக் கருதப்படக் கூடிய செயற்பாடுகளுக்கு உட்படாமல் இருப்பதற்கு தடுப்புக் காவலிலுள்ள அனைவரதும், கைதிகளினதும் உரிமைளை பொலிஸ் அலுவலர்கள் மதித்தல் வேண்டும். கைதிக்கு சுயேச்சையாக சிந்தித்து செயற்படுவதற்கும்,தன்னுடைய சுயவிருப்பத்தின் அடிப்படையில் வாக்கு மூலமொன்றை வழங்குவதற்குமுள்ள ஆற்றலினை குறைக்கும் விதத்திலான அச்சுறுத்தல்கள்,மொழிப் பிரயோகங்கள் என்பன அத்தகைய தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளுக்குள் உள்ளடங்கும்.

*3.2* அனைத்து பொலிஸ் விசாரணைக்குட்படுத்தல்களுக்கும் சட்ட ரீதியானதும், முறையான அதிகாரமளிக்கப்பட்டதும்,தெளிவாக இனம் காணத்தக்கதும் அணுகத்தக்கதுமான இடமொன்றில் நிகழ்வதை பொலிஸ் அலுவலர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

*3.3* விசாரணைக்குட்படுத்தலொன்றின் இயல்புக்கமைய,கைதியொருவர் வெளியே அழைத்துச் செல்லப்பட வேண்டி வருகின்ற விசேட சூழ்நிலை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே விசாரணைக்குட்படுத்தலாகாது. அத்தகைய சூழ்நிலைகள் தோன்றுமிடத்து சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஒருவரிடமிருந்து (உ+ம் பிரதி பொலிஸ் மா அதிபர்) எழுத்து மூல அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படவேண்டுமென்பதோடு, அத்தகைய விசேட சூழ்நிலைகளின் இயல்பு சிரேஷ்ட பொலிஸ் அலுவலரின் எழுத்து மூல அங்கீகாரத்துடன் பதிவில் எழுதப்படுதல் வேண்டும்.

*3.4* விசாரணைக்குட்படுத்தல் பணி ஒன்றிற்காக கைதியொருவர் பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்படநேரிடின் அவ்வாறு அழைத்துச் செல்வதற்கு அதிகாரமளித்த உரிய சிரேஷ்ட பொலீஸ் அலுவலர் கைதியின் பாதுகாப்பு , கட்டுக்காவல் தொடர்பான முழுப் பொறுப்புக்கும் வகை கூறல் வேண்டும்.

*3.5* விசாரணைக்குட்படுத்தல்கள் கைதிக்கு உரையாட முடியுமான மொழியொன்றில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.பொலிஸ் அலுவலர்கள் கைதியின் மொழியில் உரையாட முடியாதவர்களாகயிருப்பின், விசாரணைக்குட்படுத்தல் ஆரம்பிக்கப்பட முன்னர் மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் சேவையை நாட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

*3.6* விசாரணைக்குட்படுத்தல்களை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர்கள் அவர்களின் சீருடையில் சரியாகவும், வெளித்தெரியத் தக்கவாறும் தெளிவான அடையாளங்களைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். விசாரணைக்குட்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்ற இடத்திற்கு வேறு அலுவலர்கள் வருகை தந்திருப்பின், அவர்கள் தொடர்பாகவும் கைதி அறிவூட்டப்படல் வேண்டும்.

3.7 விசாரணைக்குட்படுத்தலொன்றின் விடயங்களை வெளிப்படுத்திக் கொள்ளத்தக்கவாறு நம்பத்தகுந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளலே குறிக்கோளாக கருதப்படும். வாக்கு மூலம் அளிப்பதற்கு, சுய குற்றச்சாட்டை மேற்கொள்வதற்கு அல்லது வேறொரு நபருக்கெதிராக சாட்சியம் வழங்குவதற்கு கைதியை நிர்ப்பந்திப்பதற்காக விசாரணைக்குட்படுத்தலைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

3.8 நீண்ட நேர விசாரணைக்குட்படுத்தல் தேவைப்படுமிடத்து கைதியின் வசதியைக் கருத்தில் கொண்டு போதியளவு ஓய்வு வழங்கப்படல் வேண்டும்.

3.9 எவரேனும் கைதி தமது சட்டத்தரணியிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கோருமிடத்து, விசாரணைக்குட்படுத்தலை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர்கள் அதற்காக அனுமதி வழங்குதல் வேண்டும்.கைதி சுயமாக எந்தவொரு குற்றச்சாட்டு வெளிப்படுத்துகையையும் திணிக்கப்படவில்லையென்பதையும், அரசியலமைப்பின் 13(3) ஆம் உப உறுப்புக்கமைய, நீதியான, நியாயமான வழக்கு விசாரணை ஒன்றிற்கு இடமளித்தது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக விசாரணைக்குட்படுத்தல்களின் போது கைதியொருவருக்கு சட்ட ஆலோசகரின் அணுகலை வழங்குதல் அவசியமானதொன்றாகும்.

சந்தேக நபரை இடம் மாற்றுதல்

3.10 'இடம் மாற்றுதல்' என்பது கைது செய்யப்பட்ட ஒருவரை அல்லது கட்டுக் காவலில் உள்ள ஒருவரை கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸ் நிலையத்திலிருந்து வேறேதேனும் சட்ட ரீதியானதும் , முறையாக அதிகாரமளிக்கப்பட்டதுமான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லுதல் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லுதல் என்பவற்றை குறிப்பதாகும். அத்தகைய ஓர் அதிகாரமளிக்கப்பட்ட இடங்களாக வைத்தியசாலை, தேடுதல் நடவடிக்கைக்கான இடம், நீதிமன்றம் அல்லது வழக்கு விசாரணைக்கு முன்னர் கட்டுக் காவலில் வைத்திருப்பதற்கான ஒரு வசதி ஆகியன உள்ளடங்கும்.

3.11 இடம் மாற்றுதலுக்கு பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்கள் கைது செய்யப்பட்டவர் அல்லது கட்டுக் காவலில் உள்ளவரை முடிந்தளவு பொதுமக்களின் பார்வைக்கு புலப்படுத்தவில்லையென்பதையும், பொதுமக்களால் நிகழக்கூடிய அவமதிப்புக்கள், ஊறுகள், காயப்படுத்தல்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பட்டுள்ளாரென்பதையும் ஊறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

3.12 கைது செய்யப்பட்ட ஒருவர் அல்லது காவலிலுல்ல ஒருவர் இடமாற்றம் செய்யப்பட வேண்டியது,இடமாற்றல்களின் நோக்கங்களுடன் பொருந்தக் கூடியதும் பாதுகாப்பானதும் பொருத்தமானதுமான போக்குவரத்து முறைமையொன்றினூடாக மாத்திரமே அமைய வேண்டும். அத்தகையவர்களை இடம் மாற்றுவதற்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ள வாகனங்கள், அவசர விபத்தொன்றின் போது அல்லது அவசர சந்தர்ப்பமொன்றின்போது அத்தகையவர்களுக்கும் அவர்களோடு பிரயாணம் செய்கின்ற பொலிஸ் அலுவலர்களுக்கும் நிகழத்தக்க காயங்களை மிகக் குறைந்த மட்டத்தில் பேணத்தக்கவாறு போதியளவில் தயார்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

3.13 கட்டுக்காவலிலுள்ள ஒருவர் ஏதேனும் ஒரு ஆதாரம் தொடர்பான பொருளைத் தேடுவதற்காக அல்லது கண்டுபிடிப்பிற்காக இடமாற்றம் செய்யப்படுவதாயின், அவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர் குறித்த சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் (குறித்த பொலிஸ்

*அதிகாரியின் பதவி, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்குக் கீழ் பட்டதாக இருக்கக்கூடாது.) பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.*

*i* *தேடுதல் நடவடிக்கைக்கான இடம் தொடர்பாக கைதி வெளிப்படுத்திய தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.(முடியுமாயின் அருகில் உள்ள சூழலின் பாதுகாப்பு மற்றும் பிரதேசத்தில் ஐயத்திற்குரித்தான நபர்கள் காணப்படுகிறார்களாவென கண்காணிப்பதற்காக பொலிஸ் அலுவலர் குழுவொன்றை அவ்விடத்தில் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.):மற்றும்*

*ii* *கைதி வெளிப்படுத்திய இடத்திற்கு கைதியை அழைத்துச் செல்கையில் நிகழக்கூடிய அபாயங்களை கணக்கிலெடுத்தல்.*

*3.14* *கைதி ஒருவரினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் பற்றிய நம்பகத்தகு தன்மை மற்றும் அத்தகைய ஒருவர் வெளிப்படுத்துகின்ற இடத்திற்கு அழைத்துச் செல்வதிலுள்ள அபாய மட்டத்தின் அளவை அடிப்படையாக வைத்து சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் தேடுதல் நடவடிக்கைக்காக.*

*I.* *ஈடுபடுத்தப்பட வேண்டிய பொலிஸ் அலுவலர்களின் உள்ளடக்கம் மற்றும் எண்ணிக்கை*

*II.* *ஈடுபடுத்தபட வேண்டிய வாகனங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை*

*III.* *பொலிஸ் அலுவலர்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டிய அதிகாரமளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் ஆயுதங்கள்*

*IV.* *குழு பின்பற்ற வேண்டிய கட்டளைத்தொடர்*

*V.* *நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற நேரம் என்பவற்றை தீர்மானித்தல் வேண்டும்.*

*3.15* *ஆபத்தான ஒருவர் என நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு கைதியை இடம் மாற்றுகின்றபோது அக்கைதிக்கும் ஏனையோருக்கும் ஏற்படக்கூடிய ஊறினை குறைந்த மட்டத்தில் பேணத்தகு கள ரீதியான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலுள்ள மிகுந்த அனுபவமும் பயிற்சியும் மிக்க அலுவலர்களை தேடுதல் நடவடிக்கைக்காக நியமிக்கப்படுகின்ற அலுவலர்களின் குழுவில் உட்சேர்த்தல் வேண்டும்.*

*3.16* *தேடுதல் நடவடிக்கைக்கு பொறுப்பான உரிய சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் பொதுவாக நடவடிக்கைளை பகல் வேளைகளில் மேற்கொள்வதற்கு திட்டமிடல் வேண்டும். இரவு வேளையில் தேடுதல் நடவடிக்கையொன்றை நடைமுறைப்படுத்த வேண்டியது, கால உணர் திறன்மிக்க அல்லது பகல்வேளையில் நடவடிக்கையை அமுலாக்கம் செய்வதில் பிரயோக ரீதியான விதிவிலக்கு காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமேயாகும்.*

*3.17* *தேடுதல் நடவடிக்கையொன்றினை இரவு நேரத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருப்பின், உரிய சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் கைதியினதும், பொலிஸ் அலுவலர்களினதும் பூரண பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேலதிகமான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.அத்தகைய முற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் இடம்,அதன் சூழல் தொடர்பான தெளிவான காட்சியை உறுதிப்படுத்துவதற்காக போதிய ஒளியூட்டல் உபகரணங்களைப் பொருத்தி வைத்தல் உள்ளடக்கப்படல் வேண்டும்.செயற்பாட்டிற்குப் பொறுப்பான உரிய*

*சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் கைதியின் பாதுகாப்புத் தொடர்பான முழுமையான பொறுப்பை ஏற்றுக் கொள்ளல் வேண்டுமென்பதுடன்,நடவடிக்கைக்கான நேரம்,இடம், கலந்து கொள்ள வேண்டிய அலுவலர்கள் மற்றும் காரணங்கள் தொடர்பான எழுத்து மூல அறிக்கையொன்றையும் வைத்திருத்தல் வேண்டும்.*

*3.18* *ஒவ்வொரு தேடுதல் நடவடிக்கைக்குமாக உள்வாங்கப்படுகின்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களும்,செயற்பாட்டின் விடயதானம் மற்றும் குறிக்கோள்கள், அவர்களின் குறிப்பான வேலைப் பணிகள் மற்றும் அத்தகைய நடவடிக்கயொன்றுடன் தொடர்புடைய ஆபத்துக்கள் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் பூரணமான விளக்கத்துடன் கூடியதாக அறிவூட்டப்பட்டிருத்தல் வேண்டும்.*

*04.பலப் பிரயோகமும் ஆயுதப் பயன்பாடும்*

*பலப் பிரயோகத்துடன் தொடர்புடைய பொதுவானகொள்கைகள்*

*4.1* *பொலிஸ் அலுவலர்கள் தத்தம் கடமைகளை ஆற்றுகையில் பலத்தைப் பிரயோகிக்க வேண்டியது, வன்முறையற்ற அனைத்து முறைமைகளையும் பயன்படுத்தியதன் பின்னர் மாத்திரமேயாகும். வன்முறையற்ற முறைமைகள் முடிவடைந்துள்ளன என கருத்தில் கொள்ளப்பட வேண்டியது, உரிய கடமையினை சட்ட பூர்வமாக ஆற்றுகின்ற போது அத்தகைய முறைமைகள் பயனற்றுப் போகின்ற போது மாத்திரமேயாகும்.*

*4.2* *பொலிஸ் அலுவலர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட பலத்தைப் பிரயோகிக்க வேண்டியது, தன்னுடைய கடமையை ஆற்றுவதோடு தொடர்புடைய சட்ட ரீதியான குறிக்கோளொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதத்திலும் மாத்திரமேயாகும்.*

*4.3* *பொலிஸ் அலுவலர் ஒருவர் பலத்தைப் பிரயோகிக்க வேண்டிய நிலை ஏற்படின் அவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற பலப்பிரயோக தேவைப்பாடு, நியாயத்தன்மை மற்றும் விகித சமம் என்ற கொள்கைகளுக்கு உறுதியாக இணைங்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும்.*

*4.4* *பலப் பிரயோகத்திற்கு அதிகாரமளிக்கும் விதத்தில் சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஒருவரினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு கட்டளையூடாகவும் சட்டத்துக்கு இணங்க பலப்பிரயோகத்திறகெனக் காணப்படும் தெளிவான தராதரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய கட்டளைக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொருதேவையற்ற, நீதிக்குப் புறம்பான அல்லது விகித சமமற்ற விதத்திலான பலப் பிரயோகம் தொடர்பான முழுமையான பொறுப்பை அத்தகைய கட்டளையை வழங்கிய சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.*

*4.5* *பலத்தை பிரயோகிக்க வேண்டியது, சட்ட ரீதியாக தேவைப்படுமிடத்து பணியில் அமர்த்தப்பட்டுள்ள அனைத்து பொலிஸ் அலுவலர்களும் தம்மால் இயன்றளவு உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் கைது செய்யப்பட்டுள்ள அல்லது கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு நபர் அல்லது இடமாற்றம் செய்யப்படுகின்ற கைதியொருவரே உள்ளிட்ட எந்தவொரு நபருக்கும் ஏற்படக் கூடிய ஊறுகள் மற்றும் காயங்களை குறைந்த மட்டத்தில் பேணத்தக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய முயற்சிகளில் பொலிஸாரின் பலப் பிரயோகத்தினால் காயங்களுக்குள்ளாகிய அல்லது*

*பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் உதவி செய்தல் மற்றும் வைத்திய சிகிச்சை வழங்குதல் என்பன உள்ளடங்கும்.*

*தடுப்பு முறைகள்*

*4.6* *பொலிஸ் அலுவலர்கள் தண்டனை வழங்கும் நோக்கில் தடுப்பு முறைகள் அல்லது கருவிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய நுட்ப முறைமைகளை அல்லது கருவிகளைப் பயன்படுத்த வேண்டியது,கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் தப்பிச் செல்வதையும் அல்லது வேறொரு நபருக்கு ஊறினை விளைவிப்பதையும் தடுப்பதற்குப் தேவையான அளவில் மாத்திரமே அமைய வேண்டும்.*

*4.7* *கைது செய்யப்பட்ட ஒருவர் அல்லது தடுப்புக் காவலில் உள்ள ஒருவரை அடக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற தடுப்பு முறைமைளை சட்டபூர்வமானவையாகவும், முறையான அதிகாரம் வழங்கப்பட்டவையாகவும் இருக்க வேண்டுமென்பதோடு, அக்குறித்த நபரின் மதிப்புக்கு குந்தகம் விளைவிக்கின்ற அதேவேளை கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான முறைமையற்றதொன்றாக இருத்தல்வேண்டும்.*

*அனுமதிக்கப்பட்ட ஆயுதங்களின் பயன்பாடு*

*4.8* *கைது செய்யப்படுகின்ற நபரொருவர் அல்லது கைதியொருவர் ஆயுதம் தரித்த எதிர்ப்பினை வெளிக்காட்டுகின்ற போது அல்லது வேறு ஏதேனுமொரு விதத்தில் ஏனையவர்களுக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற சந்தர்ப்பமொன்றில், அத்தகைய நபர் ஒருவரை அடக்குவதற்கான மாற்று வழி எதுவுமே இல்லாதவொரு சந்தர்ப்பம் தவிர்ந்த வேறெந்தவொரு சந்தர்ப்பத்திலும் துப்பாக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது.*

*4.9* *துப்பாக்கிகளை பயன்படுத்த வேண்டியது, சட்ட ரீதியானதும் இன்றியமையாத்தாகவும் இருக்குமிடத்து, உரிய நபர் ஆயுதம் தரித்த எதிர்ப்பினை வெளிக்காட்டுதலை அல்லது ஏனையவர்களுக்கான உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்துவதை முற்றாக நிறுத்தி கீழ்படியவில்லையெனின் துப்பாக்கிகளை பயன்படுத்துவதென்ற முன்னெச்சரிக்கை ஒன்றை அத்துப்பாக்கிகளை செயற்படுத்த உத்தேசிக்கின்ற பொலிஸ் அலுவலர் உரியவருக்கு வழங்குதல் வேண்டும்.*

*4.10* *பொலிஸ் அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பயன்படுத்தப்படாத ஆயுதமொன்றை விசேட செயற்பாடொன்றிற்காக அலுவலர் ஒருவருக்கு வழங்குகின்ற போது அவ்வாயுதத்தை உரிய அலுவலருக்கு வழங்குவதற்கு முன்னர், அதனைப் பயன்டுத்துவதற்காக அனுமதி வழங்குகின்ற உரிய சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் குறித்த ஆயுதத்தைப் பயன்படுத்தவுள்ள உரிய பொலிஸ் அலுவலரின் குறித்த ஆயுதத்தைப் பயன்படுத்தவதற்கான அறிவு மற்றும் ஆற்றல் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.*

*05. அறிக்கைகளைப் பேணுதல்*

*கைதின் போது –கைதினை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள்*

*5.1* குற்றவியல் குற்றமொன்று அல்லது குற்றமொன்றை இழைப்பதற்கான முயற்சியொன்று தொடர்பான எந்தவொரு தகவலையும் அல்லது புலனாய்வுத் தகவலையும் எழுத்து மூலம் பதிவுசெய்தல் வேண்டும். இத்தகைய தகவல்கள் உயர் அதிகார பீடமொன்றிலிருந்து கிடைக்கப்பெற்றிருப்பின், அத்தகைய உயர் அதிகார பீடம் தொடர்பாகவும் எழுத்துமூலம் குறித்து வைத்தல் வேண்டும்.

*5.2* ஆள் ஒருவரைக் கைது செய்கின்ற எந்தவோர் அலுவலரும் கைது தொடர்பான சரியான அறிக்கையொன்றினை வைத்திருத்தல் வேண்டும். அவ்வறிக்கையில்,

*I.* கைது செய்த அலுவலரின் பெயர், வயது, பால் மற்றும் முகவரி ;

*II.* கைது செய்யப்பட்ட திகதி மற்றும் நேரம் ;

*III.* கைது செய்யப்பட்ட இடம் ;

*IV.* கைதுக்கான காரணம் ;

*V.* சந்தேக நபரின் கைதினைத் தூண்டிய சூழ்நிலைக் காரணிகள் ;

*VI.* கைதுடன் தொடர்புடைய பொலிஸ் அலுவலர்களின் (கைது செய்யுமாறு கட்டளையிட அல்லது அதிகாரமளித்த சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் உள்ளிட்ட) ஆளடையாளங்கள்

*VII.* கைதுக்கான காரணம் கைது செய்யப்பட்ட நபருக்கு அறிவிக்கப்பட்டமைக்கான சான்று ;

*VIII.* கைது செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கைது செய்யப்பட்ட நபரின் குடும்ப அங்கத்தினரின் அல்லது நண்பரின் பெயர் மற்றும்

*IX.* பொலிஸ் அலுவலரினால் அவதானிக்கப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட போது அந்நபரினால் வெளிப்படுத்தப்பட்ட கைது செய்யப்பட்டவரின் எவையேனும் காயங்கள் அல்லது நோய் நிலைமைகள்

*5.3* மேற்குறித்த அறிக்கையை கைது செய்யப்பட்ட நபர் கிரகிக்கக்கூடிய ஒரு மொழியில் வாசித்துக் காட்டியதன் பின்னர் கைது செய்யப்பட்ட நபர் அதற்கு மறு கையொப்பமிடல் வேண்டும்.

*5.4* அறிக்கையின் பிரதியொன்றை கைது செய்யப்பட்ட நபரின் குடும்ப அங்கத்தினர் ஒருவருக்கு, அந் நபரினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு நண்பருக்கு அல்லது அந் நபர் சார்பாக ஆஜராகின்ற சட்டத்தரணி ஒருவருக்குக் கையளித்தல் வேண்டும்.

*தடுப்புக் காவலின் போது – தடுப்புக்காவலினை மேற்கொள்ளும் சந்தர்ப்பம்*

*5.5 கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையமொன்றில் தடுத்து வைக்கப்படுகின்ற அனைத்து நபர்களினதும் உட்பிரவேசம் வெளியேற்றம் தொடர்பான பதிவேடொன்றை அத்தகைய பொலிஸ் நிலையத்தில் பேணிவரல் வேண்டுமென்பதோடு, அதில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியாக உள்ளடக்கப்படல் வேண்டும்.*

*I. கைது செய்யப்பட்ட நபரின் அல்லது தடுப்புக் காவலில் உள்ளவரின் ஆளடையாளம்*

*II. உட்பிரவேசிக்கப்பட்ட நேரம்*

*III. கைது செய்யப்பட்ட நபரைக் கையாளுகின்ற அலுவலரின் பெயர்*

*IV. பொலிஸ் அலுவலரினால் அவதானிக்கப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட நபர் அல்லது தடுப்புக் காவலில் உள்ளவரினால் வெளிப்படுத்தப்பட்ட குறித்த நபரின் காயங்கள் அல்லது நோய் நிலைமைகள்.*

*V. கைது செய்யப்பட்ட நபரின் அல்லது தடுப்புக் காவலில் உள்ளவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பொலிஸாரின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ள எவையேனும் தனிப்பட்ட பொருட்களின் பெயர்ப் பட்டியல்*

*VI. வெளியேறுகின்ற நேரம்*

*VII. வெளியேறுகின்ற காரணம்*

*VIII. வெளியேறுகின்ற போது கைதி இடமாற்றம் செய்யப்படுகின்ற இடம்*

*IX. பொருத்தமாயின் கைதியோடு அத்தகையவேறு சட்ட ரீதியானதும் முறையாக அதிகாரம் அளிக்கப்பட்டதுமான தடுப்பு நிலையத்திற்குச் செல்கின்ற அலுவலர்கள்.*

*5.6 தடுப்புக் காவலில் உள்ள ஒருவரின் தடுப்புக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்களை தெளிவாக பெயரிட்டு முறையாகக் குறித்து வைத்தல் வேண்டும்.இவ்வறிக்கையில் உரிய அலுவலர்களின் 'கடமையைப் பொறுப்பேற்றல்' மற்றும் 'கடமையை முடிவுறுத்தல்' நேரங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.*

*5.7 தடுப்புக் காவலில் உள்ள ஒருவரின் தடுப்புக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்கள் தமது பொறுப்பிலுள்ள நபர்கள் தொடர்பான கீழ் குறிப்பிடப்படுள்ள தகவல்களை குறித்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.*

*I. தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு வழங்கப்படுகின்ற எவையேனும் முதலுதவிகள் அல்லது அக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நேரங்கள்*

*II. தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு வழங்கப்படுகின்ற எவையேனும் முதலுதவிகள் அல்லது வழமையான உட்கொள்ளும் மருந்துகள் (இத்தகைய அறிக்கையொன்றில் வழங்கப்படுகின்ற மருந்துகளின் பெயர்கள், உட்கொள்ளப்படுகின்ற மருந்துகளின் பெயர்கள்*

உட்கொள்ளப்படுகின்ற மருந்களின் அளவுகள் அவை வழங்கப்படுகின்ற நேரங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

*III.* தேவைப்படுமிடத்து, தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு வழங்கப்படுகின்ற எவையேனும் உணவுகள்

*IV.* தடுப்புக் காவலில் உள்ளவரைப் பார்ப்பதற்காக வருகை தருகின்ற ஒவ்வொருவரினதும் ஆளடையாளங்கள் மற்றும் அவ்வாறு வருகை தருகின்ற திகதிகள் மற்றும் நேரங்கள்

*V.* வேறு உரிய அவதானிப்புகள்

விசாரணைகள் மற்றும் புலனாய்வு மேற்கொள்ளும் சந்தர்ப்பம்

*5.8* கைது செய்யப்பட்ட நபரொருவர் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் மற்றும் புலனாய்வுகளுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர் விசாரணைகள் அல்லது புலனாய்வுகளோடு தொடர்புடைய அனைத்து விபரங்களையும் எழுத்து மூலமாக சரியாக அறிக்கையிட்டு வைத்திருத்தல் வேண்டும்

*5.9* அத்தகைய அலுவலர் ஒருவருக்கு அத்தகைய விசாரணை அல்லது புலனாய்வோடு தொடர்புடைய அனைத்து தகவல்களையும், விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளப்படுகின்ற பொழுது வருகை தந்திருந்த பொலிஸ் அலுவலர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களின் விபரங்கள் உள்ளிட்ட முழுமையான அறிவு காணப்படுதல்வேண்டும். அத்தகைய அலுவலர் ஒருவர் தமது விடயப்பரப்பின் கீழ் நடாத்தப்படுகின்ற விசாரணை அல்லது புலனாய்வோடு தொடர்புடைய அனைத்து தகவல்கள் தொடர்பாகவும் பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு பதிலளித்தலும் வேண்டும்.

*5.10* அனைத்து விசாரணை அறிக்கைகளையும் பாதுகாப்புடனும், அணுக முடியுமான இடமொன்றிலும் வைத்திருக்க வேண்டுமென்பதோடு, சட்டத்தின் மூலம் அத்தகைய அறிக்கைளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எந்தவொரு நீதிமன்றத்திற்கோ அல்லது வேறேதேனும் தகுதி வாய்ந்த அதிகார பீடத்திற்கோ அல்லது நிறுவனத்திற்கோ அதனை வழங்குதல் வேண்டும்.

*06.* அறிக்கையிடலும் பொறுப்புக் கூறலும்

மரணம் சம்பவித்த இடத்தைப் பாதுகாத்தல்

*6.1* ஒரு கைதி அல்லது தடுப்புக் காவலில் உள்ளவர் இறக்கின்ற சந்தர்ப்பத்தில். மரணத்திற்கான காரணம், மரணம் நிகழ்ந்த விதம் தொடர்பாக கருத்தில் கொள்ளாமல் அந் நிகழ்விடத்தில் பூரண விசாரணை நடாத்தப்பட்டு அவ்விசாரணை முடிவடையும் வரை மரண நிகழ்விடம் ஒரு குற்றவியல் தளமாகக் கருதப்படல் வேண்டும்.

*6.2* பொலிஸ் பாதுகாப்பில் *(custody)* உள்ளவர் ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் மற்றும்,பொலிஸாருடனான மோதல்களின் போது ஒருவர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் சட்டவைத்திய அலுவல ருக்கு அறிவிக்க வேண்டும். குறித்த அதிகாரிகள் பிரேதப்

*பரிசோதனையை மேற்க்கொண்டு , குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சுயாதீன ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்த வேண்டும்.*

*6.3* *மரணமொன்று சம்பவத்தை கண்டறிமிடத்து மரண நிகழ்விடம் முற்றாகக் கட்டுக்காப்புக்குள்கொண்டுவருதல் வேண்டும். வைத்திய அலுவலர்கள். மரணத்திற்கான காரணம் மரணம் நிகழ்ந்த விதம் என்பவற்றை பற்றி விசாரணை செய்கின்ற குற்ற நிகழ்விட விசாரணை அலுவலர்கள்* (Scene of Crime Officer) (SOCO) *தவிர்ந்த அதிகாரம் அளிக்கப்படாத எவரும் சடலத்தை அணுக இடம் அளிக்கக்கூடாது.*

*6.4* *மரண சம்பவித்த இடத்தை அணுகுவதற்கு அவகாசம் அளிக்கப்படுகின்ற அனைவர் தொடர்பான ஆளடையாளங்களும் அவர்கள் அந்நிகழ்வுடத்திற்கு அனுமதிக்கப்படுவதற்கான காரணங்களுடன் கூடிய எழுத்து மூலப் பதிவும் பேணப்படுதல் வேண்டும்.*

*6.5* *விசாரணை நோக்கத்திற்காக மரண நிகழ்விடத்தை அணுகுகின்ற அனைத்து பொலிஸ் அலுவலர்களும், அனைத்து ஆதாரங்களும் உரிய நடைமுறையின் முறையின் அடிப்படையில் பாதுகாக்கப்படுகின்றனவெனவும் எக் காரணத்தினாலும் அவை திரிபுபடுத்தப்பட மாட்டாவெனவும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.*

*மரண சம்பவித்த இடம் மீதான விசாரணை*

*6.6* *குற்ற நிகழ்விட விசாரணைக் குழுவினர் (*SOCO team*) கட்டுக்காவலில் இருந்தவரின் மரணத்தோடு அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது உயிரிழந்தவரின் மரணத்தோடு தொடர்புடைய எல்லா முக்கிய சான்றுகளும் ஒன்று திரட்டப்பட்டுள்ளனவெனவும் அவை எவ்வித திரிபுபடுத்தலுக்கோ அல்லது காணமலாக்கப்படுதலுக்கோ உட்படாத விதத்தில் முறையாக பாதுகாக்கப்பட்டுள்ளனவெனவும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.கட்டுக் காவலில் இறந்தவர் தொடர்பான தெளிவான 'கட்டுக் காவல்தொடர் ' பேணப்பட வேண்டுமென்பதோடு, அச்சான்றுத் தொடரின் எழுத்து மூலப் பதிவில் குறித்த விசாரணை அலுவலரால் கையொப்பமிடப்பட்டு ஒவ்வொரு சான்றும் கையாளப்பட்ட திகதிகள் மற்றும் நேரங்கள் குறிக்கப்படலும் வேண்டும்.*

*6.7* *பரிசோதனைகளுக்கும் பகுப்பாய்வுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டிய வைத்திய, தடவியல் மற்றும் ஆயுதப்பயன்பாடுடன் தொடர்புடைய அனைத்து முக்கிய சான்றுகளும் பொருத்தமாயின் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு பரிசோதனைக்காகவும் பரிசீலனைக்காகவும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*6.8* *மரணம் சம்பவித்த இடத்திற்கு மற்றும் அதன் அருகாமைக்கு சமூகமளித்த நபர்களிடமிருந்து விரிவானதும் பூரண விளக்கத்துடன் கூடியதுமான வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதே போன்று மரண நிகழ்விடத்தில் சடலத்தைப் பரிசோதனை செய்த எவரேனும் வைத்திய அலுவலரிடமிருந்தும் விரிவான அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.*

*சடலத்தை இடம் மாற்றல்*

*6.9* *கட்டுக் காவலிலிருந்த ஒருவரின் அல்லது பொலிஸாருடன் மோதல்களின் போது (Encounter) உயிரிழந்த ஒருவரின் மரணம் நிகழ்கின்றவிடத்து, அச்சடலம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் கையாளப்படல் வேண்டும் .*

*6.10* குறித்த சடலம் இடமாற்றம் செய்யப்படுவதற்காக தயார்படுத்தப்படும் போது, அது எவ்வித விகாரப்படுத்தலுக்கோ அல்லது ஊறுபடுத்தலுக்கோ உட்படுத்தப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதோடு, பிரேத பரிசோதனை இடம்பெறும் இடத்திற்கு சடலம் அகற்றப்படுவதையும் போக்குவரத்து செய்யப்படுவதையும் மிக அருகிலிருந்து மேற்பார்வை செய்தல் வேண்டும். குறித்த மேற்பார்வைப் பணி முறையாக எழுத்து மூலம் பதிவுசெய்யப்பட வேண்டுமென்பதோடு, குற்ற நிகழ்விடப் பரிசோதனை அணியினரின் *(SOCO)* அறிக்கையோடு இணைக்கப்படலும் வேண்டும்.

வைத்திய, தடயவியல் மற்றும் உந்துவிசைச் சான்றுகள்

*6.11* பிரேத பரிசோதனை அறிக்கைகள்,விரலடையாளங்கள்,இரசாயன பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் ஆயுதப்பயன்பாடு தொடர்பான அறிக்கைகள் உள்ளிட்ட எல்லா வகையான வைத்திய , தடயவியல் மற்றும் ஆயுதப்பயன்பாடு தொடர்பான சான்றறிக்கைகள் மிக விரைவில் உரிய அதிகாரிகளால் தயாரிக்கப்படல் வேண்டும்.

*6.12* குறித்த அறிக்கைகள் எவ்வித மாற்றங்களுக்கும் உட்படுத்தப்படாதென்ற உறுதிப்பாட்டுடன் கூடிய வகையில் அவை பாதுகாக்கப்படல் வேண்டும். உரிய விசாரணைகளை நடாத்துகின்ற அலுவலர்களுக்கும், வழக்குத் தொடுத்தலின் போது உரிய நீதிமன்ற மற்றும் வழக்குத் தொடுத்தலுடன் தொடர்புடைய அதிகார பீடங்களுக்கும் கிடைக்கத்தக்கனவாக அவ்வறிக்கைகள் இருத்தல் வேண்டும்.

நெருங்கிய உறவினர்களுடனான தொடர்பாடல்

*6.13* மரணித்தவர்களின் ஒரு குடும்ப அங்கத்தவருக்கு அல்லது மிக நெருங்கிய நண்பரொருவருக்கு குறித்த மரணம் தொடர்பாக உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும். மரண நிகழ்வு சம்பவித்த இடம் மற்றும் மரணித்தவரின் சடலம் இடமாற்றம் செய்யப்பட்ட இடம் என்பன தொடர்பான தகவல்களும் குறித்த குடும்ப அங்கத்தவருக்கு அல்லது நண்பருக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

*6.14* விசாரணையின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களும் இறப்பெய்தியவரின் குடும்ப அங்கத்தவருக்கு அல்லது நண்பருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

*6.15* பிரேத பரிசோதனையின் பின்னர் இறப்பெய்தியவரின் உறுப்புகள் மேலதிக பரிசோதனைக்காக எடுத்து வைக்கப்பட வேண்டியதேவை காணப்படுமிடத்து அது பற்றி குறித்த இறப்பெய்தியவரின் குடும்ப அங்கத்தினருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.குறித்த உறுப்புகள் உரிய பரிசோதனை முடிவடைந்தவுடன் குடும்பத்தினருக்கு மீள் வழங்கப்படுதல் வேண்டும்.

*6.16* இறப்பெய்தியவர் மரணிக்க முன்னரும் மரணத்தின் போதும் தம் வசம்வைத்திருந்த தனிப்பட்ட உடமைகளை அவரின் தடுப்புக் காவலுக்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ் அலுவலர் இறப்பெய்தியவரின் குடும்பத்தினரிடம் கையளித்தல் வேண்டும்.

*6.17* பிரேத பரிசோதனை மற்றும் உரிய ஏனைய பரிசோதனைகள் முடிவடைந்தவுடன் இறப்பெய்தியவரின் சடலம் அவரின் குடும்பத்தினருக்கு மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் கையளிக்கப்படல் வேண்டும்.

*6.18* அவ் இறப்பெய்தியவரின் குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் நண்பர்களோடு தொடர்பாடல்களிலும் ஒருங்கிணைப்புப் பணிகளிலும் ஈடுபடுகின்ற பொலிஸ் அலுவலர்கள்

இறப்பெய்தியவரினதும் அவரது குடும்பத்தினர்கள் மற்றும் நண்பர்களினதும் கௌரவத்திற்கு குந்தகம் ஏற்படாத விதத்தில் நடந்து கொள்ளல் வேண்டும்.

*மரணம் தொடர்பாக ஊடக அறிக்கைகளை வெளியிடல்*

*6.19* தடுப்புக் காவலில் இருந்தவர் அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது *(Encounter)* மரணித்தவரின் மரணம் தொடர்பாக ஊடகங்களுக்கு அறிக்கைகளை வழங்குகையில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்பொழுதும் இறந்தவரின் தனித்துவத்திற்கும் கௌரவத்திற்கும் குந்தகம் ஏற்படாத வகையில் அப்பணியை மேற்கொள்ளல் வேண்டும்.

*6.20* இறப்பெய்தியவரின் கைதுக்கான காரணம், கடந்த கால குற்றவியல் பதிவுகள் மற்றும் அவரினதும் அவரது குடும்ப அங்கத்தினர்களதும் இனம், சமய அல்லது வாழிடம் போன்ற தனிப்பட்ட தகவல்களும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படக் கூடாது.

*6.21* ஊடகங்களுக்கான தகவல்களை வெளியிடுகையில், அவற்றுக்குப் பொறுப்பான பொலிஸ் அலுவலர்கள் இறப்பெய்தியவரின் குற்றப் பொறுப்பு நிரூபிக்கப்படும் வரை அவர் குற்றமற்றவரென ஊகிக்கப்படுவதற்கெனவுள்ள அவரது உரிமைக்கு மதிப்பளித்தல் வேண்டும். இறப்பெய்தியவர் ஏதேனும் ஒரு குற்றத்திற்கு குற்றம் சுமத்தப்பட்ட ஒருவராகவோ அல்லது சந்தேக்கிக்கப்பட்ட ஒருவராகவோ மாத்திரம் இருக்கின்றவிடத்து, அந்நபரை ஒரு 'குற்றவாளி' அல்லது ஒரு 'தவறிழைத்தவர்' என சித்தரிக்கக் கூடாது.

*மரணம் தொடர்பாக ஒரு சுயாதீனமான விசாரணையை நடாத்துதல்*

*6.22* தடுப்புக் காவலில் இருந்தவர் ஒருவர் அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது *(Encounter)* ஒருவர் மரணிக்கின்ற போது, ஒரு சுயாதீனமான விசாரணைக் குழுவினரால் (COI) விசாரணையொன்று நடாத்தப்படுதல் வேண்டும். குறித்த குழு பின்வரும் அலுவலர்களை (பதவியில் உள்ளவர்களாயினும் சரி ஓய்வு பெற்றவர்களாயினும் சரி) உள்ளடக்குதல் வேண்டும்.

*I* பிரதி பொலிஸ்மா அதிபர் தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை உடைய ஒரு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அலுவலர்

*II* ஒரு சட்டவைத்திய அலுவலர்

*III* அரசாங்க பகுப்பாய்வாளர்

*IV* ஓர் ஆயுதங்கள் தொடர்பான நிபுணர் (துப்பாக்கி ஒன்றினால் மரணம் சம்பவிக்கின்றவிடத்து) மற்றும்

*V* ஒரு நீதிபதி அல்லது ஒரு சட்டத்தரணியான சட்ட தொழில் வாண்மை மிக்க ஒருவர்

*6.23* குறித்த விசாரணை துரிதமாகவும், வினைதிறன் மிக்கதாகவும், பூரண விளக்கத்துடன் கூடியதாகவும், பக்கச்சார்பற்றதாகவும், வெளிப்படைத்த தன்மையுடன் கூடியதாகவும் நடைபெறுதல் வேண்டும்.

*6.24* அத்தகைய சுயாதீன விசாரணைக் குழுவின் விசாரணை, பின்வரும் விடயங்களை இலக்காகக் கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

*I* அனைத்து வாக்குமூலங்களையும் மற்றும் ஆவண, எண்ணிம மற்றும் பௌதிக சாட்சிகளையும் திரட்டுதலும் உறுதிப்படுத்திக் கொள்ளலும்

*II* மரணம் இயற்கையானதா, திடீர் மரணமா, தற்கொலையா அல்லது கொலையா எனபதை சரியாகத் தீர்மானித்துக் கொள்ளல்.

*III* மரணம் நிகழ்ந்ததைத் தடுக்கும் விதத்திலான நடவடிக்கைகள் இருந்தனவா என இனம்காணல்

*IV* மரணத்திற்கு பங்களிப்புச் செய்திருக்கத் தக்க முறை சார் தவறுகளை இனங்காணல்

*6.25* இலங்கை பொலிஸ் மற்றும் சுயாதீன விசாரணைக் குழு மரணித்தவரின் குடும்ப அங்கத்தினவர்களுக்கும்,பொது மக்களுக்கும் எச் சந்தர்ப்பத்திலும் விசாரணை நடை முறைகளும், அதன் விளைவுகளும் வெளிப்படைத் தன்மையுடனும் மரணமடைந்தவரின் குடும்ப அங்கத்தினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அணுகி ஆராயத்தக்கவிதத்திலும் இருப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். வெளிப்படைத் தன்மைக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாயின், பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு, தனித்துவம் என்பவற்றைக் காப்பதற்கும், நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற விசாரணையின் நேர்மைத் தன்மையைப் பேணுவதற்கும் அல்லது பொலிஸ் செயற்பாடுகள் மற்றும் புலனாய்வு மூலங்களோடு தொடர்புடைய தகவல்களின் இரகசியத் தன்மையை பேணுவதற்குமான சட்ட நோக்கங்களுக்காக மாத்திரம் வரையறுக்கப்படல் வேண்டும்.

*6.26* விசாரணையின் முடிவில் பொலிஸ் அலுவலர் எவ்வித சட்டக் காப்புமின்றி (உ+ம் தற்காப்புக்கான உரிமை) தடுப்புக் காவலில் இருந்தவரின் அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது *(Encounter)* உயிரிழந்தவரின் மரணத்திற்குக் காரணமாக இருந்ததாகத் தெரியவருடமிடத்து, அலுவலருக்கு எதிராக உடனடியாக வழக்குத் தொடுத்தல் மற்றும் ஒழுக்காற்றுச் செயன்முறை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

*6.27* தடுப்புக் காவலில் இருந்தவரின் அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது *(Encounter)* உயிரிழந்தவரின் மரணத்திற்குக் காரணமாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட குறித்த அதிகாரியின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு கால தாமதமின்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடலும் ஒத்துழைப்பு வழங்கலும்

*6.28* கைது செய்யப்பட்ட ஒரு நபருக்கு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அல்லது வேறு எவரேனும் நபருக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக அறியும்பட்சத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உடனடியாக அவ்விடயம்தொடர்பாக உரிய பொலிஸ் நிலையத்துடன் தொடர்பாலை மேற்கொள்ளும்.

*6.29* கைது செய்யப்பட்ட ஒரு நபருக்கு அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு பொறுப்பாகவுள்ள பொலிஸ் அலுவலர்கள் அத்தகைய ஆளின் பாதுகாப்பு,இடர்காப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பாக எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடவும் பொறுப்புணர்ச்சியோடும் முறையாகவும் பதிலளிக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*6.30* உரிய சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அவசரகால நிலைமைகளின் பொழுது குறித்த பொலிஸ் நிலையத்தின் முக்கிய பணிகளின் பிரதான அலுவலராகப் பணியாற்றுகின்ற பொலிஸ் அலுவலருடன் உடனடியாகத் தொடர்பு கொள்வதை இயலச் செய்யும் பொருட்டு அவரின் தொடர்பு விபரங்களை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்குதல் வேண்டும்.

*6.31* இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கைது செய்யப்பட்டுள்ள ஒரு நபரை அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரை சட்ட வைத்திய அலுவலரிடம் *(JMO)* ஆற்றுப்படுத்துமாறு கோருகின்ற பொழுது அத்தகைய நபரின் கட்டுக் காவலுக்குப் பொறுப்பாகவுள்ளவர்கள் அவரை உடனடியாக சட்ட வைத்திய அலுவலருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.தொடர்ந்து உரிய பொலிஸ் அலுவலர்கள் வைத்திய சட்டப் பரிசோதனை விண்ணப்பப் படிவத்தினை *(MLEF)* அவ்விண்ணப்பப் படிவம் கிடைக்கப் பெற்று *24* மணித்தியாலங்களுக்குள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

*6.32* ஒரு கைதி தடுப்புக்காவலில் இருக்கும் போது அல்லது பொலிஸாருடனான மோதல்களின் போது *(Encounter)* மரணம் நிகழுமிடத்து, அத்தகைய நிகழ்வு தொடர்பான விபரத்தை குறித்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி *24* மணித்தியாலங்களுக்குள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழு சொந்தப் பிரேரணைணையைப் *(suo motu )* பயன்படுத்தி குறித்த நிகழ்வோடு தொடர்புடையதாக அடிப்படை உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளனவாவென ஆய்ந்தறியுமாறும் விசாரிக்குமாறும் அழைப்பு விடுக்கும்.

*6.33* உரிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையை உரிய துணை ஆவணங்களோடு சமர்ப்பிக்குமாறு கோருதல் வேண்டும். குறித்த கோரிக்கை கிடைக்கப் பெற்று *72* மணித்தியாலங்களுக்குள் உரிய ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

*6.34* இலங்கை பொலிஸ் குறித்த ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் சுயாதீன விசாரணைக்க குழுவினால் தயாரிக்கப்பட்ட விரிவான விசாரணை அறிக்கையை இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பரிந்துரைகள்

மேற்குறித்த வழிகாட்டு நெறிகளை முழுமையாக அமுலாக்கம் செய்யும் நோக்கத்திற்காக இலங்கை பொலிஸார் பின்வரும் பரிந்துரைகளை அமுலாக்கம் செய்யமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

*1.* அனைத்து பொலிஸ் அலுவலர்களும் இவ் வழிகாட்டல்ளை அமுலாக்கம் செய்வது தொடர்பான பயிற்சிகளை வழங்குதல். அத்தகைய பயிற்சிகள் ஒன்றில் உள்ளக அல்லது வெளிவாரி வளவாளர்களைப் பயன்படுத்தி வழமையான பாங்கில் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதோடு, அவை இலங்கை பொலிஸாரின் பயிற்சிகள் பாடத் திட்டத்தின் தராதரங்களுக்கேற்ப ஒருங்கிணைக்கப்படல் வேண்டும்.

2. அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் கட்டாயமானதுமான வழக்கமானதுமான ஆயுதங்களைக் கையாளும் பயிற்சிகளை வழங்குதல்.பொலிஸ் செயற்பாடுகளின் போது குறித்த ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கென வழங்க முன்னர் ஆயுதங்களை கையாளுவதற்கான அவர்களின் திறன்களைப் பற்றிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. அனைத்து பொலிஸ் அலுவலர்களும் முதலுதவி தொடர்பான அடிப்படை அறிவையும் பயிற்சியையும் வழங்குதல்.

4. தற்கொலை முயற்சியில் ஈடுபடக்கூடிய ஒரு நபரின் கட்டினை விரைவில் அகற்றுவதற்கான ஆற்றலையும் அறிவையும் அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் வழங்குதல்.

5. அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் அவர்களின் கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு,தேவைப்படுமிடத்து, கருத்துரை வழங்கல் உள்ளிட்ட உளவியல் சமூக ஆதரவை வழங்குதல்.

6. பொலிஸ் நிலையங்களினதும் ஏனைய அதிகாரமளிக்கப்பட்ட தடுப்புக் காவல் நிலையங்களினதும் விசாரணைக் கூடங்கள், மறியல் கூடங்கள், நடமாடும் தாழ்வாரங்கள் மற்றும் ஏனைய முக்கிய இடங்களுக்கும் *CCTV* கண்காணிப்பு முறைமைகளைப் பொருத்துவதற்கும் காணொளிப் பதிவுகளை வைத்திருப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவும். அத்தகைய *CCTV* ஒளிப்படக் கருவிகளை பொருத்துகின்ற போது கைது செய்யப்பட்ட ஒருவரின் அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் பிரத்தியேக உரிமைகள்,கௌரவம் மற்றும் சட்டத்தரணிகளுடனான அல்லது வைத்திய தொழில்வாண்மையாளர்களுடனான அந்தரங்க தொடர்பாடல்கள் என்பவற்றுக்கு கண்ணியம் அளிக்கப்படல் வேண்டும்.